# இரண்டு வழித்தடங்களில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில்



சென்னை, பிப்.9-

சென்னையில் 172.91 கிலோ மீட்டர் தூரத்துக்கு இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதற்கட் டத்தில் 45.01 கிலோ மீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்த டங்கள் 2019-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மக்கள் பயன்பாட்டிற்கு முழு மையாக வரவுள்ளன. திரு வொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரையிலான ஒன்பது கிலோமீட்டர் நீளமுள்ள முதற்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் நிறைவுற்று, 2020-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும். 2018-2019-ம் ஆண் டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக 1,950 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவித்தபடி, மீனம்பாக்கம் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ பேருந்துப் பணிமனை வரை மெட்ரோ இரயில் திட்ட வழித்தடம் நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண் டாம் கட்டத்தின் கீழ், 118.90 கிலோமீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ ரயில் வழித்தடங்களில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் வரையி லுமான 52.01 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த ஜப்பான் பன்னாட்டுக் கூட் டுறவு முகமை 20,196 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப் புதல் அளித்துள்ளது. இதற்கு மாநில அரசும் 40,941 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் இத்திட்டப்பணிகளை மேற் கொள்ள நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்திட் டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மற்ற வழித்தடங்களுக்கான நிதி ஆதாரங்களைத் திரட் டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் சென்னைப் பெருநகரப் பகு திகளில் மெட்ரோ ரயிலின் சேவைப்பகுதி 172.91 கிலோ மீட்டராக அதிகரித்து, பொதுப் போக்குவரத்தில் மெட்ரோ ரயிலின் பங்கு கணிசமாக அதிகரிக்கும். 2019-2020-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப் பீடுகளில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான பங்கு மூலதனம் மற்றும் கடனாக மொத்தம் 2,681 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.